

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு 'சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்' கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தமைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்டப் பொருளாளர் கு.இராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன்,சி.சந்திரசேகரன், லதாபாலு மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டத்தில் தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டேன். தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் அமைச்சர். இரா. இராஜேந்திரன் கலந்து கொண்டு பேசினார். மற்றும் 'ஓரணியில் தமிழ்நாடு' கழக உறுப்பினர்கள் அதிகம் சேர்த்தவர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார். கழக செய்தி தொடர்பு இணைச்செயலாளர். சூர்யா கிருஷ்ணமூர்த்தி, டி.எம். செல்வகணபதி எம்.பி. பொருளாளர். மு.கார்த்திகேயன், கே.டி.மணி, தாமரைகண்ணன், பா.ரகுபதி, ஷெரீப், தினகரன், சா.சுப்பிரமணி, பி.குப்புசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து

# தருமபுரி மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனை - ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி , செப். 23 -

வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிரதிருத்தம் (SIR) குறித்து தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பாக ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டம் நடைபெறுகிறது என மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மண்டல பொறுப்பாளர், பொதுப்பணி, நெடுஞ்சாலைமற்றும் சிறுதுறை முகங்கள் துறைஅமைச்சர் எ.வ.வேலு; ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்



Special Intensive Revision (SIR) குறித்தும், கூடுதல் வாக்குச் சாவடிகள் அமைவதுகுறித்தும் தருமபுரி மேற்கு மாவட்ட நிர்வாகிகளுக்கான ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டம்.

தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் மற்றும் பாலக்கோடுஆகியசட்ட மன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட சட்டமன்ற தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அவர்களுக்கான ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டம் மாவட்ட கழகசெயலாளர் முனைவர் பி.பழனியப்பன்; முன்னிலையிலும், மாவட்ட வழக்கறிஞர் அணிஅமைப்பாளர் வழக்கறிஞர்.வு.சந்திரசேகர்; தலைமையிலும் நடைபெறும். இக்கூட்டத்தில் வாக்குச்சாவடிவாரியாகவாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் Special Intensive Revision (SIR) செயல்படுத்துவதை வாக்குச்சவாடி முகவர்கள் (BLA 2 அப்பணியில் ஈடுபடுத்தி ஆய்வுசெய்வது குறித்தும், கூடுதல் வாக்குச்சாவடிகள் அமைவது குறித்தும் நிர்வாகிகளுக்கு கீழ்கண்ட தேதி மற்றும் இடங்களில் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

தேதி - நாள் - நேரம் - சட்டமன்றத் தொகுதி - கூட்டம் நடைபெறும் இடம்

24.09.2025 - புதன் - காலை 10.00 மணிக்கு பாப்பிரெட்டிப்பட்டி - எம்.சி.எஸ். மஹால், கடத்தூர்.

பிற்பகல் 2.00 மணிக்கு அரூர் என்.என் மஹால், அரூர்

25.09.2025 - வியாழன் காலை 10.00 மணிக்கு பாலக்கோடு மாவட்ட கழக அலுவலகம், காரிமங்கலம்

இக்கூட்டத்தில் சட்ட மன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், சட்ட மன்றத் தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மற்றும் தருமபுரி மேற்கு மாவட்ட, சட்ட மன்றத் தொகுதி வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்!

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' மாபெரும் பொதுக்கூட்டம்!

## எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. – நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்புரை!

சேலம், செப். 23 -

தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் "ஓரணியில் தமிழ்நாடு உறுதி மொழி ஏற்பு பொதுக் கூட்டம் சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆத்தூர் கலைஞர் திடலில் ஆத்தூர் வடக்கு நகர செயலாளர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தெற்கு நகர செயலாளர் ஏ.ஜி. ராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் கு. சின்னதுரை, க.சுரேஷ்குமார், மலையரசன் எம்.பி, தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி, மாநில கொள்கை பரப்பு இணை செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி ஆகியோர் சிறப்புரையாற்றி னார்.

இதனை தொடர்ந்து அனைவரும் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். இக்கூட்டத்தில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், செயற்குழு , பொதுக்குழு சந்திரமோகன், உறுப்பினர்கள் ரேகா பிரியதர்ஷினி, சங்கர், கோபால், மனோகரன், தமிழ்செல்வன், ராஜா, சோமசுந்தரம், மாவட்ட பிரதிநிதி சம்பத்குமார், ஸ்டாலின், பாலமுரளி கிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், விஜயகுமார், ரத்தினவேல், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், சிவராமன், மூர்த்தி, தங்க மருதமுத்து, டாக்டர் செழியன், வரதராஜன், மணி, அழகுவேல், சித்தார்த்தன், ராஜேந்திரன், பாலமுருகன், சதீஷ்குமார், நகர செயலாளர் வேல்முருகன் சார்பு அணி நிர்வாகிகள் ப்ரண்ஸ் ரமேஷ், முனைவர் . சீனிவாசன், தனசேகரன், சேகர், ராஜசேகரன், செல்வமணி, அருண்குமார், சிவராமன், பாரதி, பேரூர் செயலாளர்கள் பாலமுருகன், வேலு, காங்கமுத்து, சரவணன், வெங்கடேசன், பாபு, செல்வராஜ், சண்முகம், முருகேசன், சுப்பிரமணி, முருகப்பிரகாஷ், ரவிக்குமார், செல்வம், திமுக நிர்வாகிகள் மாணிக்கம், சூப் வேல்முருகன், குமார், சசிகுமார், செல்வராஜ், ராஜவேல், பூக்கடை ராஜா, பைத்தூர் ரவி, பர்கத் அலி, அன்னபூரணி, பத்திரம் மனோகரன், கருணாநிதி, நல்லம்மாள் , சாந்தி, சேட்டு, செல்வமணி, ராஜேந்திரன், கிருஷ்ண மூர்த்தி, நகர மன்ற தலைவர்கள் நிர்மலா நமிதா, அலெக்சாண்டர், மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் , நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் என திரளாக கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் ஆடிட்டர் வேல்முருகன் நன்றியுரையாற்றினார்.




தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் "ஓரணியில் தமிழ்நாடு" உறுதிமொழி ஏற்பு பொதுக்கூட்டம் சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆத்தூர் ராணிப்பேட்டை கலைஞர் திடலில் ஆத்தூர் வடக்கு நகர செயலாளர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தெற்கு நகர செயலாளர் ஏ.ஜி.ராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் கு. சின்னதுரை, க .சுரேஷ்குமார், மலையரசன் எம்.பி, தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி, மாநில கொள்கை பரப்பு இணை செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதனை தொடர்ந்து அனைவரும் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

# கரூரில் புதிய ஜவுளி பூங்கா - மெத்தைகள் தைக்கும் இயந்திரம்!

## அமைச்சர் ஆர்.காந்தி – வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்தனர்!

கரூர், செப், 23 -

கரூரில் புதிய ஜவுளி பூங்கா, மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரத்தை அமைச்சர் ஆர்.காந்தி, வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்தனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி ஆகியோர் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில், கரூர் வேலுச்சாமிபுரம் பகுதியில் கைத்தறித்துறையின் சார்பாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க கட்டிட வளாகத்தில் ரூ. 35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்பட்ட மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரத்தையும் மற்றும் ஜவுளித்துறையின் சார்பாக கோடங்கிப்பட்டியில் ரூ. 11.87 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஜவுளிப் பூங்காவினையும் திறந்து வைத்தார்கள்.

பின்னர் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மற்றும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் செய்தியாளர்களிடம் கூறிய தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் ஜவுளி மற்றும் கைத்தறி உற்பத்தியினை மேம்படுத்த பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கைத்தறித் துறையின் சார்பாக பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் 2024-25 ஆம் ஆண்டு கைத்தறி ஆதரவுத் திட்டம் தொழில்நுட்ப மேம்பாடு இனத்தின் கீழ் ரூ.35லட்சம் மதிப்பீட்டில் கே.ஆர் (எச்) 2 தியாகி குமரன் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.31.50லட்சம் அரசு மானியத்துடன் கூடிய ரூ.35.லட்சம் மதிப்பிலான மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமானது 2002 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, 217 உறுப்பினர்கள் மற்றும் 65 தறிகளுடன் செயல்பட்டு வருகிறது. கடந்த நிதி ஆண்டில் ரூ.1.14 கோடி மதிப்பிற்கு கைத்தறி துணிகள் உற்பத்தி செய்து, ரூ.1.26 கோடி அளவிற்கு விற்பனை மேற்கொண்டு ரூ.9.48லட்சம் லாபத்துடன் செயல்பட்டு வருகிறது.

சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் 3 ஜவுளி உற்பத்தி தொழிற் கூடங்கள் அமைக்கப்பட வேண்டும். தகுதிவாய்ந்த திட்ட மதிப்பில் 50 விழுக்காடு அல்லது ரூ.2.50 கோடி இவற்றில் எது குறைவானதோ அத்தொகை தமிழ்நாடு அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. "ஓயாசிஸ் டெக்ஸ்பார்க் பூங்காவானது மாநில அரசு மானியம் ரூ. 2.50 கோடியுடன். மொத்தம் ரூ.11.87 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப் பூங்காவில் ஆண்டொன்றுக்கு 7 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வணிகம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, சுமார் 400 பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் கைத்தறி, கைத்திறன். துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு செயலர் வி.அமுதவல்லி. துணிநூல் துறை இயக்குநர் லலிதா இராஜேந்திரன், கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மண்டல துணிநூல் துணை இயக்குநர் செ.சந்திரசேகரன், உதவி இயக்குநர் (கைத்தறி) பழனிக்குமார். கைத்தறி நெசவாளர்கள் சங்கப்பணியாளர்கள் மற்றும் துணிநூல் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் 'உங்களுடன் ஸ்டாலின்'திட்ட முகாம் நடைபெற்றது. முகாமிற்கு விராலிமலை தாசில்தார் ரமேஷ் தலைமை தாங்கினார். இதில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச் சித்துறை, மருத்துவத்துறை, வேளாண்மை துறை, மின்சாரத் துறை உள்ளிட்ட 16 அரசுதுறை அலுவலர்கள் கலந்துகொண்டு பொதுமக்களிடமிருந்து மகளிர் உரிமைத்தொகை, பட்டா மாறுதல், ரேஷன் கார்டில் பெயர் திருத்தம், சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைப் பெற்று அவற்றை கணினியில் பதிவேற் றம் செய்தனர். இதில் பொதுமக்கள் வழங்கிய பல்வேறு மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை புதுக் கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், வழங்கினார். நிகழ்வில் தி.மு.க. விவசாயதொழிலாளரணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி.மணி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், ஒன்றிய செயலாளர்கள் அ.இளங் குமரன், கே.பி.அய்யப்பன் மற்றும் விராலிமலை சிவா, மெடிக்கல் குமார், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள், ஊராட்சி மன்ற செயலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை விராலிமலை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், வள்ளியம்மை, ஊராட்சி மன்ற செயலாளர் கருப்பையா ஆகியோர் செய்திருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோபி ஜி. வெங்கிடு

### செப்டம்பர் 23 (2020)



**பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழக கொள்கையில் ஈர்க்கப்பட்டு பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினர். தீவிர சுயமரியாதைக்காரர்.**

**வட்டச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட இலக்கிய அணி தலைவர் – மாநில விவசாய அணி இணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, தலைமைக் கழக பேச்சாளராக தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.**

**கோபி நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியதோடு, 1996ஆம் ஆண்டு கோபி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**1952–ல் தார்ச்சட்டி ஏந்தி இந்தியை அழித்த போராட்டத்தில் துவங்கி, 1964 இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**"பொதுமக்களின் சேவகராகத் திகழ்ந்த – கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவரான ஜி.பி.வெங்கிடு அவர்களின் மறைவு கழகத்திற்குப் பேரிழப்பாகும். " என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**